செய்தி வெளியீடு எண்:694 நாள்:06.09.2021

## தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

## பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில், இன்று (06.09.2021), தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்ந்த கீழ்க்கண்ட மூன்று சட்டமுன்வடிவுகள் நிறைவேற்றப்பட்டன:–

1. 2021–ஆம் ஆண்டு, தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு.
2. 2018–ஆம் ஆண்டு, தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தம்) திருத்தச் சட்டமுன்வடிவு.
3. 2021–ஆம் ஆண்டு, தமிழ்நாடு தொழிலாளர் நலநிதியச் (திருத்தச்) சட்டமுன்வடிவு.

மாநிலத்திலுள்ள கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் நபர்கள் அவர்களது வேலை நேரம் முழுவதுமாக நிற்க வைக்கப்படுகின்றனர், அதன் விளைவாக பல்வகையான உடல்நலக் கேடுகளுக்கு ஆளாகின்றனர். தங்களது வேலை நேரம் முழுவதும் தங்கள் பாதங்களிலேயே நிற்கும் வேலையாட்களின் நிலைமையை கருத்தில் கொண்டு, 2021–ஆம் ஆண்டு, தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவின் மூலம், கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் நபர்கள் அவர்களது வேலையின் போது நேரிடும் அமரும் வாய்ப்பு எதையும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதற்காக வேலையாட்களின் நலன் கருதி, ஒவ்வொரு நிறுவனமும் இருக்கை வசதி வழங்க வழிவகை செய்யப்பட வேண்டும்.

2. தற்போது, 2018–ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தம்) திருத்தச் சட்டமுன்வடிவில், பதிவினை புதுப்பித்தலுக்கான நடைமுறை நீக்கப்படுகிறது. மேலும், பதிவுச்சான்று கோரி விண்ணப்பம் பெறப்பட்ட 24 மணி நேரத்திற்குள் பதிவுச்சான்று வழங்கப்படவேண்டும். அவ்வாறு வழங்கப்படாவிடில், வழங்கப்பட்டதாக கருதப்படும்.

3. 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நலநிதியச் (திருத்தச்) சட்டமுன்வடிவின் மூலம், தொழிலாளர் நல நிதிய பங்கிற்கான உச்ச வரம்பினை பணியாளரின் பங்களிப்பாக ஆண்டொன்றுக்கு ஐம்பது ரூபாய்க்கு மிகாத ஒரு தொகையும், அத்தகைய ஒவ்வொரு பணியாளரைப் பொருத்தும், பணியமர்த்துநரின் பங்களிப்பாக நூறு ரூபாய்க்கு மிகாத ஒரு தொகையும், அரசின் பங்களிப்பாக ஐம்பது ரூபாய்க்கு மிகாத ஒரு தொகையாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இதனால், தோராயமாக 35.00 இலட்சம் தொழிலாளர்கள் பயன்பெறுவர். இதனால், ஏற்படக்கூடிய கூடுதல் செலவினம் தோராயமாக தொடர் ஆண்டிற்கு ரூ.3.50 கோடியாகும். இச்சட்ட திருத்த வாயிலாக பெறப்படும் நிதி, தொழிலாளர் நல வாரிய நலத் திட்டங்கள் மூலம் அளிக்கப்பட்டு வரும் உதவித் தொகையினை உயர்த்துவது, புதிய நலத் திட்டங்களை அறிமுகப்படுத்துவது போன்ற இனங்களை மேற்கொள்ள செலவிடப்படும்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9